Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011 Posted at Batlagundu Post Office on 10th Nov. 2011



Gethsemane Garden



Franking the magazines for posting

## உங்கள் வானொலியில்

இலங்கை ஆசிய சேவை
SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்

## உங்கள் தொலைக்காட்சியில்

**TAMILAN TV**
EVERY Monday 6.00 - 6.15 a.m

**Z TAMIL TV**
EVERY Wednesday 5.45 - 6.00 a.m

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041


*Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

E-mail: arjunglory@yahoo.co.in
Website: thewordofchristsouthindia.com

THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 11 நவம்பர் 2011 கனி 12

## REHOB - ரேகோப்




- திறந்த வாசல் அல்லது பிளாசா.
- கானான் தேசத்திலுள்ள ஒரு நகரம் - யோசுவா19:28-31.
- இங்கு எகிப்திய கலாச்சார பொக்கிஷம் அதிகமாக உள்ளது.
- யோசுவாவினால் ஆசேர் புத்திரரின் கோத்திரத்துக்கு சுதந்தரமாகக் கிடைத்தது.
- இஸ்ரவேலின் அதிநீளமான துண்டுகளால் இணைக்கப்பட்ட சித்திரவேலைப்பாடுகள் இந்த இடத்தில் தோண்டிஎடுக்கப்பட்டுள்ளன.
- ஆசேர் கோத்திரத்தார் அக்கோவின் குடிகளையும், சீதோனின் குடிகளையும், அகிலாப், அக்சீப், எல்பா, ஆப்பீக் ரேகோப் பட்டணங்களின் குடிகளையும் துரத்திவிடவில்லை - நியா.1:31.
- ரேகோபிலுள்ள சீரியர் யுத்த வீரர்கள் - 2சாமு.10:8



### கர்த்தருடைய ஊழியம் வளர்ந்து பெருக
### உதவ காத்திருக்கும் இவர்களோடு தொடர்புகொள்ளவும்


சகோ. பிரபாகரன்
நாமக்கல் மாவட்டம்
9597860409


சகோ. கோவிந்தராஜன்
தஞ்சை மாவட்டம்
9952685685


சகோ. மாயாண்டி
மதுரை மாவட்டம்
9159795725


சகோ. ராஜாமணி
திருநெல்வேலி மாவட்டம்
9940841932


சகோ. டேவிட்
சேலம் மாவட்டம்
9597352233


சகோ. ராஜசெல்வம்
கன்னியாகுமரி மாவட்டம்
9487954973


சகோ. பிளசன்
நாகை மாவட்டம்
9092171897


சகோ. ராம்ராஜ்
திருப்பூர் மாவட்டம்
9487043077


சகோ. யோவான்
விழுப்புரம் மாவட்டம்
9940487200


சகோ. ஜோதி
தேனி மாவட்டம்
9843837498



## வேத அறிவுப் போட்டி எண் : 135

போட்டியாளாகள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. சாரமில்லாத சாந்தைப் பூசுகிறவர்களை நோக்கி: என்ன சொல்ல வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்?
2. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் என்னவாயிருக்கிறார்?
3. தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்ட ராஜா யார்?
4. நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. இஸ்ரவேலர் எவ்வளவாய்ப் பெருகினார்களோ, அவ்வளவாய் எனக்கு விரோதமாய் என்ன செய்தார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
6. நிலைதவறி, தன்னிலேதானே ஆக்கினைத்தீர்ப்புடையவனாய்ப் பாவஞ் செய்கிறவன் யார்?
7. வானமும் பூமியும் அதிரும்; ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு எப்படிப்பட்ட கோட்டையுமாயிருப்பார்?
8. தன் ஜெபங்களில் யார் யாரை நினைத்து எப்பொழுதும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான்?
9. உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன்; உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்கு என்ன இல்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்?
10. சாரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே... கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், எவர்கள் பிறந்தார்கள்?


### கர்த்தருடைய ஊழியம் வளர்ந்து பெருக
### உதவ காத்திருக்கும் இவர்களோடு தொடர்புகொள்ளவும்



சகோ. ஜான் எஸ். நாதன்
திருவள்ளூர் மாவட்டம்
9444443378


சகோ. வல்கனோ பிலிப்பு
சென்னை மாவட்டம்
9710929234


சகோ. அர்ஜூனன்
திண்டுக்கல் மாவட்டம்
9443558041



"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

சிறுவர் பகுதி

# பொய்யர் - Liars



அன்பான தம்பி தங்கைகளே இன்றைய நாளில் பொய் சொல்லுகிறவர்களை குறித்து பார்ப்போம். பொய்யைக்குறித்து வேதாகமம் நமக்கு என்ன சொல்லுகிறது? "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என வெளிப்படுத்தல் 21:8–ம் வசனத்தில் படிக்கிறோம். இந்த வசனப்பகுதியில் அநேக பாவிகளை பட்டியலிட்டு காட்டுகிறது. அதில் குறிப்பாக பொய்யரைக்குறித்தும் சொல்லுகிறது. இவர்கள் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்களாம். நாம் காலையில் குளிக்கும்போது சற்று அதிகமாக தண்ணீர் சூடேற்றி விட்டால் நம்மால் அதை உடலிலே ஊற்ற முடியவில்லை. அத்தோடு சூடேற்றாத தண்ணீரை கலந்து குளிக்கிறோம். அப்படியிருக்கும்போது அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல் என்றால் அது எவ்வளவு சூடேற்றப்பட்டதாகவும், அருகாமையிலே கூட செல்லக்கூடாத அளவு அனல் நிறைந்ததாகவும் இருக்கும் அதை நம்மால் எண்ணிப்பார்க்கவே பயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட இடத்தில் பொய்யர்கள் அனைவரும் பங்கடைவார்கள் என பரிசுத்தவேதாகமம் நமக்குப்போதிக்கிறது. பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது என்றால் அது ஒருவனை பயப்படுத்தும்படியாக சும்மா சொல்ல வில்லை. அந்தப்படியே ஆகும். அதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. ஆகையால் நாம் செய்யவேண்டுவதென்ன? "நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" (எபே.4:25). நீங்கள் உங்களுடன் படிக்கும் மாணவர்களோடு அல்லது மாணவிகளோடு உண்மையை பேசுகிறீர்களா? அல்லது சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன் என்று பொய்சொல்லிக்கொண்டே இருக்கிறீர்களா, கடுகளவும் பொய் சொல்லாதிருக்கப்பழகுங்கள். தேவன் ஒரு பொய்யும் சொல்லாதவர். அவரைப்போல நாமும் பொய் சொல்லாதிருக்கவேண்டும்.

நாம் பொய்சொல்லி வாழவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் பிதாவாகிய தேவன் நமக்கு பூமியிலே சகலத்தையும் நேர்த்தியாக படைத்திருக்கிறார். பூமியிலே நாம் சரியானபடி பாடுபடும்போது அது நமக்கு நலமானதைக் கொடுக்கும். "பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம்போலிருக்கும்" என நீதிமொழிகள் 21:6–ல் வாசிக்கிறோம். நீங்கள் அப்பா அம்மாவிடம் ஏதாவது ஒரு பொய் சொல்லி காரியத்தை சாதிக்க நினைக்காதிருங்கள். அது உங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்காது. "உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" என்று மத்தேயு5:37–ல் நமது ஆண்டவராகிய இயேசு சொன்ன வசனத்தை நினைவுகூருங்கள்.

**"அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை" – 1யோவான்2:4**



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 11 நவம்பர் - 2011 கனி - 12

# கடைசி நாட்களில்
## *In The Last Days...*

ஆசிரியருரை



இவ்வுலகத்தின் கடைசி நாட்களில் என்ன நடக்கும் என்பதை இச்செய்தியின் மூலமாக நாம் தியானிக்கவுள்ளோம். அப்போஸ்தலனாகிய பவுல் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபம் 3-ம் அதிகாரம் வசனங்கள் 1-5-ல் “கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக...” என்று சொல்லி 19 பாவங்கள் நிறைந்த மக்களைக்குறித்து தெரியப்படுத்துகிறார். நாம் வாழுகின்ற இக் கடைசி நாட்களில், 19 பாவங்கள் நிறைந்த மக்களை நாம் அநுதினமும் காண்கிறோம்.

**1. தற்பிரியராயும் என்று வாசிக்கிறோம்.** தற்பிரியர் என்று சொல்லும்போது தனக்காக வாழுகின்றவர்கள். மற்றவர்களைப் பற்றியும், நாட்டைப்பற்றியும் அக்கரை இல்லாதவர்கள். தன்னுடைய வயிறு நிறைந்தால் போதும் என நினைக்கக்கூடியவர்கள். வேதம் நமக்குப் போதிப்பது என்ன? “அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக” (பிலி.2:4). நம்மையே நாம் நோக்கிக்கொண்டிராமல் பிறருடைய தேவைகளையும் அறிந்து அவர்களுக்கு உதவ முன்வரவேண்டும்.

**2.பணப்பிரியராயும் இருப்பார்கள்.** பணஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. ஆனால் கொஞ்சங்குறைய எல்லோரும் பணஆசையுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். “யூதாஸ் பணப்பையை சுமக்கிறவனாயிருந்தான்” என்று யோவா.12:6-ல் வாசிக்கிறோம்.

**3.வீம்புக்காரராயும் இருப்பார்கள்.** வீணானவைகளில் பிடிவாதமாயிருப்பது. இஸ்ரவேலரைப் பாருங்கள். அவர்கள் சிலவேளைகளில் தேவனுக்கு விரோதமாக வீம்புபாராட்டினார்கள். ஆகையால் ஓசியா தீர்க்கன் மூலம்

கர்த்தர்பேசும்போது; "இஸ்ரவேல் அடங்காத கிடாரியைப்போல் அடங்காதிருக்கிறது;" என்கிறார் (ஓசி.4:16). உங்களுடைய வாழ்க்கையில் வீணான காரியங்களில் பிடிவாதமாக இல்லாமல், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவைகளுக்கு அடங்குங்கள்.

**4.அகந்தையுள்ளவர்களாயும் இருப்பார்கள்.** "அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும்" என்று நீதி.13:10-ல் படிக்கிறோம். அகந்தை சண்டையைப் பிறப்பிக்கும் என்று அறிந்து அகந்தையை கைவிடவேண்டும். கூடுமானால் யாவரோடும் சமாதானமாயிருக்கவேண்டும் என்று காண்கிறோம்.

**5.தூஷிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.** தூஷணவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து பிறக்கக்கூடாது. அப்படியிருக்கும்போது இன்று துணிந்து தூஷிக்கிறவர்களைக் காண்கிறோம். அவர்கள் என்னை எப்படி திட்டினார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று சொல்லி அவர்களை சரமாரியாக திட்டி தூஷிப்பார்கள். "பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்; கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்" என்று (யூதா 9). பிரதான தூதனே பிசாசை தூஷணமாக குற்றப்படுத்த துணியாதிருக்கும்போது நீங்களும் நானும் நம்மைப்போல தேவசாயலில் உண்டாக்கப்பட்டவர்களை தூஷணமாய்க் குற்றப்படுத்த துணியலாமா?

மேலும், **6.தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும் இருப்பார்கள்.** இக்காலங்களில் நாம் அதிகமாக இப்படிப்பட்டவர்களை பார்க்கிறோம். முற்பிதாக்களின் காலங்களில் தாய் தகப்பனை மதித்து வந்தார்கள். இப்பொழுது இருக்கிற அநேக பிள்ளைகள் தாய் தகப்பனை மதிப்பதில்லை, ஆகையால் இது கடைசி காலங்கள் என்று அறிகிறோம். வேதம் "பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் இது நியாயம்" என போதிக்கிறது (எபே.6:1).

**7. நன்றியறியாதவர்களாயும் இருப்பார்கள்.** "இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்;" என்று ஓசியா தீர்க்கன் மூலம் கர்த்தர் பேசினார் (ஓசி.8:14). அவர்களை 40 வருடகாலமாக வானத்தின் அப்பத்தினால் போஷித்தார். அவர்களுடைய பாதரட்சை தேய்ந்துபோகவில்லை. அந்த அளவுக்கு அவர்களை அற்புதவிதமாக வழிநடத்திவந்தார். கட்டாத வீடுகளிலும், நடாத திரட்ச தோட்டங்களிலும் அவர்களை குடியமரப்பண்ணினார். அதையெல்லாம் இஸ்ரவேலர் மறந்து கோவில்களை கட்டி விக்கிரகங்களை வழிபட ஆரம்பித்தனர். இப்படிப்பட்டவர்கள் இன்றும் இருக்கிறார்கள் ஆகையால் இக்கடைசி நாட்களில் நன்றியறியாதவர்களை நாம் விட்டு விலகும்படியாக கர்த்தர் இவ்வசனத்தின் மூலம் பேசுகிறார்.

**8.பரிசுத்தமில்லாதவர்களாயுமிருப்பார்கள்.** ஆம், பரிசுத்தத்தை விரும்பாமல் வருவது வரட்டும் என்று மக்கள் அசுத்தத்தையே



உம்முடைய குமாரன் உம்மை (பிதாவை) மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும் (வசனம்2) பிதாவானவர் தம்முடைய நேசக்குமாரனை பரலோகத்திலும், பூலோகத்திலும் எப்போதும் மகிமைப்படுத்தினார். தான் பெற்ற மகிமையை தக்கவைத்துக் கொள்ளவும், தம்மை பின்பற்றுகிறவர்கள் அனைவரும் மகிமைப்பட வேண்டியே ஜெபிக்கிறார் (வசனம் 1-5).

இயேசு தமது சீடர்கள் அவருடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டு அவரை விசுவாசிக்கவும் (வசனம்8) பிதா தந்த அனைவருக்காக வேண்டினார். (வசனம்9) பிதா அவருக்கு கொடுத்த அவர்களில் மகிமைப்பட்டிருந்தார். (வசனம்10) பிதாவும், குமாரனும் ஒன்றாயிருந்ததுபோல (குமாரனுக்கு கொடுக்கப்பட்டவர்கள் அனைவரும்) ஒன்றாய் இருக்க (பிரிவினை இல்லாமல்) அவர்கள் பிரிவினையிலிருந்து, உலகத்திலிருந்து காக்கப்படவும் (வசனம்11) ஒன்றாயிருக்கவும் அவர்களை அவர் காத்துக் கொண்டிருந்ததையும் (வசனம்12) மேலும் பிதாவானவர், நாம் உலகத்தில் உள்ளளவும் தீமையினின்று காக்கும்படியாகவும் (வசனம்15) ஜெபித்தார். மேலும் தம்முடைய சீடர்களின் வார்த்தைகளை கேட்கிற வருங்கால விசுவாசிகள் அனைவரும் (இயேசுவை) விசுவாசிக்கிறவர்களுக்காவும் (வசனம்20) வேண்டுவதுடன், விசுவாசிக்கிற அனைவருமே பிரிவினை இன்றி பிதாவும், குமாரனும் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் (பிதாவிலும் குமாரனிலும்) ஒன்றாயிருக்க வேண்டினார் (வசனம்21) எப்படியெனில் (பிதாவும் குமாரனும்) நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் (நாம் அனைவரும்) ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுக்கிறேன் (வசனம்22) இப்படியாக வசனம் 20-26 வரைக்கும் வாசிக்கும்போது, இயேசு கிறிஸ்துவின் நீண்ட பரிந்து வேண்டி ஜெபித்த (Jesus Intercessory Prayer) ஜெபத்தில் முக்கியமாக: 1. வசனம் 21-22-ல் அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் 2. அவர்களெல்லாரும் நம்மில் (நம்மோடு) ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன் (வசனம்21) நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் (கிறிஸ்துவின் சபையின் விசுவாசிகள்) ஒன்றாயிருக்கும்படி 3. நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.

## முடியாது

-Rajamani

- **யாராலும் கண்களை திறந்து கொண்டு தும்ம முடியாது**
- **பன்றிகள் வானத்தை அண்ணாந்து பார்க்க முடியாது**
- **யானையால் குதிக்கவும் தாண்டவும் முடியாது**
- **பூனையால் இனிப்பு சுவையை உணர முடியாது**
- **முதலைகளுக்கு நாக்கை வெளியே நீட்ட முடியாது**

**பறந்தாலும் நின்றாலும் தட்டானால் இறக்கையை மடக்க முடியாது**

**அதைப்போல**

**மனிதன் தன்னிலும் பலத்தவரோடே போராட முடியாது (பிர.6:10)**

சரித்திர ஆய்வு

# தெரிந்துகொள்வோம்

**John S.Nathan** Gospel Minister
cell:9444443378

**இயேசுகிறிஸ்து பிரிவினையை விரும்பவில்லை.**

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" என்றார் யோவான்17:21. நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்; வசனம்9.

அன்பின் சீடனும் அவருடன் எப்போதும் இணைபிரியாது சிலுவையின் மரணமட்டும் இருந்தவருமான யோவான் உலக மக்களுக்கு தெரிவித்த மாபெரும் பொக்கிஷம் இயேசுகிறிஸ்துவின் மாபெரும் ஜெபம் (யோவான்17) ஆகும். (இயேசு) அவர் தனித்திருந்த போதெல்லாம் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார் லூக்கா5:16. இயேசு கிறிஸ்து ஒருபோதும் தன்னுடைய சுயதேவைக்காக தம்முடைய பரலோகபிதாவிடத்தில் ஜெபிக்கவே இல்லை. யோவான் 14-ம் அதிகாரம் முதல் 17-ம் அதிகாரம் முடிய தம்முடைய சீடர்கள் இவ்வுலகில் ஒன்றாயிருக்கவும் ஒற்றுமையுடனும் வாழவிரும்பினவராய், அவர்களெல்லாரும் மகிமையடையும்படி தமது "பிதாவை" (இச்சுவிசேஷத்தில் 122 முறை கூறப்பட்டுள்ளது உலகம் என்ற வார்த்தை இவ்வதிகாரத்தில் 18 முறையும் வருகிறது) நோக்கி ஜெபித்தார். மனிதனை சிருஷ்டிக்கும்போது, அவன் தன்னுடன், தனக்குக் கீழ்ப்படிந்து, தம்முடனே வாழவே விரும்பி சிருஷ்டித்தார். ஏதேனை பண்படுத்தவும், பாதுகாக்கவும் கட்டளை பெற்ற ஆதாம் தன் கடமையை சீராக செய்யாததினால் தோட்டத்துக்குள் சாத்தான் பிரவேசித்து, ஏவாளை வஞ்சித்தது, எனவே அவன் பாவம் செய்து இறுதியாக தேவனுடன் உள்ள ஐக்கியத்தை இழந்து, அங்கிருந்து வெளியே அனுப்பப்பட்டான், தனிமைப்படுத்தப்பட்டான்.

**மகிமைப்படும்படிக்கு இயேசு ஜெபித்தார்.**

ஆனாலும் அவனின் மீது அன்பும் அக்கறையுமுடையவராய், அவனுக்கு ஆறுதலாகவும் காலம் வரும்போது தான் இழந்துபோன தேவ மகிமையை, அன்பை, ஐக்கியத்தை திரும்பப் பெற முடியுமென்பதையும் தெரியப்படுத்தும் நோக்கத்துடன் ".....அவர் உன் தலையை நசுக்குவார்" என்று ஆதி.3:15. ஆதாம் அடைந்த தற்கால (Temporary) தோல்வி ஒரு நாள் ஜெயமாக மாறும் என்பதை அவனுக்கு நம்பிக்கை உண்டாகும்படி கூறினார். இயேசு இரட்சகர் சிலுவையில், சாத்தான் மீது வெற்றிக் கொண்டு பாவத்தை, சாபத்தை வென்றவராகத் தான் மகிமையை விட்டு வந்த பரலோகத்திற்கு தம்முடைய பரிசுத்த பிதாவினிடத்திற்கு (பரிசுத்த பிதா என்ற வார்த்தை இங்குமாத்திரம் கூறப்பட்டுள்ளது) தேவ மனிதன் இழந்துபோன மேன்மையான மகிமையை, நித்திய ஜீவனை அளிக்கவும், மாம்சமான யாவர் மேலும் நீர் அவருக்கு (குமாரனுக்கு) அதிகாரங் கொடுத்தபடியே



தெரிந்துகொள்கிறார்கள். பரிசுத்தத்தில் அவர்களால் நிலைத்திருக்கமுடியவில்லை. ஆகையால் போதனையின்றி வாழ்வதையே விரும்புகின்றனர். ஆனால், "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என்று எபி.12:14-ல் வாசிக்கிறோம். ஏனெனில் தேவன் பரிசுத்தர். அவரை தொழுதுகொள்ளுகிற ஒவ்வொருவரும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.

**9.சுபாவ அன்பில்லாதவர்களாயுமிருப்பார்கள்.** அன்பே பிரதானம் என்று பார்க்கிறோம். ஆனால் இக்கடைசி நாட்களில் சுபாவ அன்பில்லாதவர்கள் நிறைந்து காணப்படுகிறார்கள். "அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று யோவான் குறிப்பிடுகிறார் (1யோவா.4:18). ஆகையினாலே தம்முடைய ஒரேபேரான குமாரனையே நமக்காக கொடுத்து இப்பூமியில் அன்புகூர்ந்தார். அன்பிலே நிலைத்திருக்கிற எவனும் தேவனாலே உண்டானவனாயிருக்கிறான்.

**10.இணங்காதவர்களாயும் இருப்பார்கள்.** தேவனுடைய வசனத்திற்கு இணக்கமாக போகாதவர்கள் இஸ்ரவேலுக்குள்ளும் இருந்தார்கள் என வேதத்தில் நாம் வாசிக்கிறோம். "என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள்; அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்றிருக்கிறார்கள்; வேசித்தன ஆவி அவர்களை வழி தப்பித் திரியப்பண்ணிற்று; அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம்போனார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஓசி.4:12). இன்றைக்கும் இந்தவிதமாக வேத சத்தியத்தை தெரிந்தும், அவைகளுக்குக் கீழ்ப்படியாமல் அநேகர் சோரமார்க்கமாய் போகிறார்கள் அவர்களோடு எந்தவிதமான ஐக்கியமும் கூடாது. அவர்களை விட்டு விலகவேண்டும் என எச்சரிக்கப்படுகிறோம்.

**11.அவதூறு செய்கிறவர்களாயுமிருப்பார்கள்.** அதாவது உடன் இருந்துகொண்டே நமக்கு விரோதமாக பேசக்கூடியவர்கள். இப்படிப்பட்டவர்கள் சபையிலும், குடும்பத்திலும் இருக்கிறார்கள். மோசேயின் காலத்தில் "எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம்பண்ணியிருந்தபடியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம்பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசி. கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம், பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்" என்று எண்.12:1,2-வசனங்களில் படிக்கிறோம். இப்படி விரோதமாக முறுமுறுக்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

**12.இச்சையடக்கமில்லாதவர்களாயுமிருப்பார்கள்.** தேவனுடைய மனிதன் இச்சையடக்கமுள்ளவனாயிருக்கவேண்டும். குறிப்பாக புறஜாதிமக்களிலும் சொல்லப்படாத காரியத்தை செய்கிறவனாயிருக்கக்கூடாது. ஆனால் அம்னோன் என்ற மனுஷன் தன் சகோதரியாகிய தாமார் மீது ஆசையாயிருந்தான் என்று 2சாமு.13:4-ங்கில் வாசிக்கிறோம். இவ்விதமான தவறான உறவுமுறை

கொள்வதற்கு என்ன காரணம்? அவனுக்குள் இச்சையடைக்கம் இல்லை.இப்படிப்பட்டவர்களை கர்த்தர் அருவருக்கிறார்.

**13.கொடுமையுள்ளவர்களாயுமிருப்பார்கள்.** பார்வோன் இஸ்ரவேலரை சாந்தும் செங்கலுமாகிய இவைகளைச் செய்யும் வேலையினால் அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கினான் என்று யாத்.1:14-ம் வசனத்தில் படிக்கிறோம். இந்தவிதமாக, ஜனங்களை கொடுமைப்படுத்தக்கூடியவர்கள் இருக்கிறார்கள். விசுவாசிகளை உடைய எஜமான்கள் இந்தவிதமாக இருப்பார்கள் என்றால் அவர்களை விட்டு விலகி உங்களுக்கு விசுவாசவிஷயத்தில் உதவியாயிருக்கிற எஜமான்களிடம் வேலைக்குச் செல்லுங்கள்.

**14.நல்லோரைப்பகைக்கிறவர்களாயுமிருப்பார்கள்.** நல்லோரைப் பகைக்கிறவர்கள்தான் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டேபோகிறார்கள். இது கடைசி காலமாயிருக்கிறபடியால் இவைகள் எல்லாம் நடந்தேறுகிறது. பவுல்கூட தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக என்றார்" (2தீமோ.4:14). ஊழியத்தில் பவுலுக்கும் போராட்டம் இருந்தது. உடன் இருந்தவர்களே நன்மைக்கு தீமைசெய்திருக்கிறார்கள். ஆண்டவருக்கு செய்ததைப்போல, அவருடைய பிள்ளைகளுக்கும் செய்கிறார்கள்.

**15.துரோகிகளாயும் இருப்பார்கள்.** தூரோகிகளை பற்றி நாம் அறிவோம். தூரோகியான யூதாஸ் என்று படிக்கிறோம். "ஆதாமைப்போல உடன்படிக்கையை மீறி, அங்கே எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினார்கள்" என்று ஓசி.6:7-ல் படிக்கிறோம்.

**16.துணிகரமுள்ளவர்களாயுமிருப்பார்கள்.** கோராகு தாத்தான் போன்றோர் மோசேக்கும் ஆரோனுக்கு எதிர்த்துநின்றதுபோல (எண்.16:3). இன்றைக்கும் ஊழியர்களுக்கு விரோதமாக எழும்புகிறார்கள் என அறிகிறோம்.

**17.இறுமாப்புள்ளவர்களாயுமிருப்பார்கள்.** "விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதி.16:18). இறுமாப்பாய் இருக்கிறவர்கள் மனமேட்டிமையானவர்கள். அவர்கள் ஒருநாளில் விழுந்துபோவார்கள்.

**18.தேவ பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும் இருப்பார்கள்.** யாக்கோபு இவர்களைப் பற்றி சொல்லும்போது; "பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்" என்கிறார் (யாக்.5:5).

**19.தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின்பெலனை மறுதலிக்கிறவர்களாயுமிருப்பார்கள்.** ஆம், ஆண்டவர் இப்படிப்பட்டவர்களைக் குறித்து எச்சரித்திருக்கிறார்; "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்" (மத்.7:15). ஆகையால் இது கடைசி நாட்கள் என்று அறிகிறோம். அன்பான சகோதரனே, சகோதரியே இப்படிப்பட்டவர்களை விட்டுவிலகு என 2தீமோ.3:5-ல் சொல்லப்பட்டிருக்கிறது.



மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றி திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பான நரகத்தின் மகனாக்குகிறீர்கள் என்றார். இன்று அநேகர் சுய இஷ்டமான உபதேசத்தினாலே அநேகரை நரகத்தின் மகனாக்குகிறார்கள். ஆனால் இயேசுவோடு இருந்த சீடர்களோ தங்களை இயேசுவின் ஊழியக்காரர் என்கிறார்கள்.

இயேசுவோடு இருந்த சீஷர்கள் அப்போஸ்தலர்கள் என்ற தகுதியை வரத்தை பெற்றிருந்தாலும் தங்களை கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்று பேதுருவும் தனது 2ம் நிருபத்தில் தன்னைக் குறித்து சொல்லியிருக்கிறார். 2பேது1–ல் ஊழியக்காரர் என்றே சொல்லுகிறார். பவுலும் 2கொரி.4:5–ல் தன்னை கிறிஸ்துவின் ஊழிக்காரன் என்றே சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்றால் இயேசுவிற்கு ஊழியம் செய்வது. இயேசு வானவர் சொன்னபடி "நான் உங்களுக்கு கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்றார் (மத்.28:20).

நாமும் இயேசுவானவர் சொல்லிய உபதேசத்தை சொல்லுவோம். யோவான் ஸ்நானனைப்போல நாமும் வானந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாய் இருப்போம்.

## நடப்புச் செய்திகள்

- அனைத்து தரப்பு மக்களுக்கும் வங்கி சேவை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், சிறிய கிராமங்களில் வங்கி சாராத ஏ டி எம் மையங்கள் அமைக்க மத்திய நிதியமைச்சகம் திட்டமிட்டுள்ளது.
- நடப்பு 2011-12-ம் நிதியாண்டில், நாட்டின் கச்சா எண்ணெய் உற்பத்தி, 3.81 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- அனைத்து அரசு பள்ளிகளிலும், இம்மாத இறுதிக்குள், கழிப்பறை வசதி ஏற்படுத்தப்படவேண்டும் என அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு, சுப்ரீம்கோர்ட் உத்தரவிட்டுள்ளது.
- இலங்கையில் உள்ள பழமையான திருக்கேதீச்சரம் என்ற கோவிலின் புனருத்தாரண பணிக்காக இந்திய அரசு, 32 கோடியே, 60 லட்சம் இலங்கை ரூபாயில் அளிப்பதாக ஒப்புதல் அளித்துள்ளது.
- தமிழகத்தில் முதல் முறையாக எஸ்.ஆர்.எம்., பல்கலைக்கழகத் தொழில் நுட்பத்துறை மாணவர்கள் மூலம் உருவாக்கப்பட்ட செயற்கைக்கோள் பி.எஸ்.எல்.வி., சி-18 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரி கோட்டா ஏவுதளத்திலிருந்து வெற்றி கரமாக ஏவப்பட்டது.

## பொது அறிவு சோதனை

1. இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் தலைமையகம் எங்குள்ளது?
   அ) டில்லி ஆ) கொச்சின் இ) பெங்களூரு
2. காற்றில் ஒலி அலைகள் எவ்வாறு பரவும்?
   அ)குறுக்கலைகள் ஆ) இரண்டு வகையும் இ) நெட்டலைகள்
3. பயோகேஸில் அதிகமாக இருப்பது என்ன?
   அ) கார்பன்டை ஆக்ஸைடு ஆ) ஆக்சிஜன் இ) மீத்தேன்
4. பாலில் காணப்படும் "டைசாக்கரைட்" எது?
   அ)சுக்ரோஸ் ஆ) மால்டோஸ் இ) லேக்டோஸ்
5. மிக அதிக ஊடுருவும் ஆற்றலை உடைய கதிர்?
   அ) ஆல்பா கதிர் ஆ) பீட்டா கதிர் இ) காமா கதிர்

**விடைகள்**
1.இ
2.இ
3.இ
4.இ
5.இ

## நான் வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன்
### I AM The Voice of One Calling In The Desert

*-Govindarajan*



யோவான் சுவிசேஷம்1:19–23 யோவான்1:19–ன்படி ஆசாரியரும் லேவியரும் யோவானிடத்தில் வந்து நீ யார் என்று கேட்டார்கள். அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டது மன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான். அப்படியானால் லேவியர்கள் அவனை கிறிஸ்து என்று நினைத்திருந்தார்கள். அவனோ நான் கிறிஸ்து அல்ல என்று அறிக்கையிட்டான். மேலும் அவர்கள் யோவானை அநேக வார்த்தைகளினாலே தொந்தரவு செய்தார்கள். எப்படியென்றால் நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள். அதற்கும் அல்ல என்றான்.

அவர்கள் பின்னும் அவனை நோக்கி நீர் யார் எங்களை அனுப்பினவர்களுக்கு உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மை குறித்து என்ன சொல்கிறீர் என்று கேட்டார்கள். அதற்கு அவன் கர்த்தருக்கு வழியை செவ்வை பண்ணுங்கள் என்ற ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான்.

இன்றைய நாட்களில் அநேகர் தன்னை, அருட்தந்தை, பேராயர், பிஷப், ஃபாதர், அப்போஸ்தலன், ரெவரெண்டு, பாஸ்டர் என்றும் சொல்லி அழைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் யோவானோ தன்னை சத்தம் என்று சொல்லி, தம்முடைய ஊழிய காலங்களில் இப்படியாக உபதேசித்து இருக்கிறார்.

மத்தேயு23:2–ல் வேதபாரகரும், பரிசேயரும், மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்றும் மத்தேயு23:5–ல் அவர்கள் தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர்காண வேண்டுமென்று செய்கிறார்கள் தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களை பெரிதாக்கி விருந்துகளில் முதன்மையான இடங்களையும் ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்.

நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள் கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லோரும் சகோதரராய் இருக்கிறீர்கள்.

பூமியிலே ஒருவரையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள். பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்கு பிதாவாயிருக்கிறார்.

நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள் கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார் என்று நமது ஆண்டவர் குறிப்பிடுகிறார். இன்றைய நாட்களில் அநேகர் இந்த உபதேசங்களை மறைத்து தன் இஷ்டமான உபதேசங்களை, மனுஷர் உபதேசங்களை, சுய உபதேசங்களை செய்கிறார்கள். மேலும் கிறிஸ்துவானவர் அப்படிப்பட்ட உபதேசங்களை செய்கிறவர்களை இப்படியாக கண்டிக்கிறார். மத்.23:15 மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ ஒருவனை உங்கள்



எனவே அவர்கள் நடுவிலிருந்து விலகி உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**19 பாவங்கள் நிறைந்தவர்களை நாம் விட்டு விலகவேண்டுமா?**

இதற்கு பவுலுடைய விளக்கம்; "நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங்கூடாது. புறம்பே இருக்கிறவர்களைக்குறித்துத் தீர்ப்புச் செய்கிறது என் காரியமா? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவோ நீங்கள் தீர்ப்புச்செய்கிறீர்கள்? புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தேவனே தீர்ப்புச்செய்வார். ஆகையால் அந்த பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள்" என எழுதுகிறார் (1கொ.5:11-13). உங்களை சுத்தவானாக காத்துக்கொண்டு தேவனுடைய இரக்கத்தைப்பெற காத்திருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**ஜெபியுங்கள்**

1. *இவ்வருட இறுதி ஊழியங்களுக்காக...*
2. *புதிய வருடத்தில் தேவன் புதுமையானவைகளை செய்ய...*
3. *நமது இந்தியதேசத்தில் சுவிசேஷம் ஊழியம் தொடர...*
4. *ஒவ்வொரு கிராமத்திலும் கர்த்தருடைய சபை எழும்ப...*
5. *மாவட்டங்கள்தோறும் நடைபெறும் ஊழியங்களுக்காக...*
6. *விசுவாசிகள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...*




**வேத அறிவுப்போட்டி எண் 134 –ல் வெற்றிபெற்றவர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | TMt.மரகதம் திரவியம் | –கோம்பை |
| 2. | Sis.வசந்தா | –கோவை |
| 3. | A.ரெபேக்காள் | –மதுரை |
| 4. | R.கஸ்தூரி | – ஒட்டநத்தம் |
| 5. | M.இராமச்சந்திரன் | – ஒட்டநத்தம் |
| 6. | V.F.சர்லோ | – பாண்டி |
| 7. | Mrs.தயாஜெயராஜ் | – தாராபுரம் |
| 8. | N.ஜான்செல்லையா | – மதுரை |
| 9. | J.நிர்மலாஜான் | – மதுரை |
| 10. | Mrs.வனிதாசாமுவேல் | – மதுரை |
| 11. | R.கிப்ட்ராஜாமணி | – ஒட்டநத்தம் |
| 12. | R.ஸ்டெல்லா இளமதி ஜேசுதாஸ் | – " |
| 13. | Mrs.ரூபி பிரகாஷ் | – தாராபுரம் |
| 14. | G.பூங்கோதை | – கோபி |
| 15. | N.கமலவேணி | – சென்னை |
| 16. | T.ராஜாத்தி | – கோம்பை |
| 17. | S.சரோஜினி | – தாராபுரம் |
| 18. | Sis.பொன்னிவிக்டர் | – தாராபுரம் |

**வேத அறிவுப்போட்டி எண் 134 –ன் விடைகள்**

1. இருதயத்தை –பிர.7:7
2. ஆம் –2கொ.13:4
3. அசட்டைபண்ணப்படும் –உன்ன.8:7
4. கலாத்தியர் –கலா.5:16
5. விசனப்படுத்தினார்கள் – ஏசா.63:10
6. துக்கப்படுத்தாதிருங்கள் – எபே.4:30
7. வெறிக்கப்பண்ணினது – எரே.51:7
8. கர்த்தர் –பிலி.4:5
9. பலவந்தமாய்ப்பிடுங்கிப்போட்டார் – புல.2:6
10. தேவசமாதானம் –கொலோ.3:15



# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

## பாடம் -7 மது அருந்துதல் - **Drining**

***J.C.Choate***



J C Choate

உங்கள் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவின் நாமத்தில் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இன்னொரு வேதாகமப் பாடத்தோடு திரும்பவும் வருகிறேன். ஒரு துன்மார்க்கனாய் இருப்பவனுக்கு மேலாக, ஒரு நீதிமானாக இருப்பவனுக்கு வரும் நன்மையினிமித்தம் நாம் தீமைக்கு மேலாக நன்மையையே அழுத்திக் கூறிக்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக நாம் நம்முடைய பழைய மனிதனைக் களைந்து போட்டுவிட்டு கிறிஸ்துவுக்குள் புதிய மனிதனைத் தரித்துக்கொள்வதினால் இது நம்முடைய செல்வாக்காக இருக்கிறது.

நமக்கு மிகத் தெளிவாக இந்த ஞானத்தைக் கவனிக்க உதவுகிறது. அதன் பின் நாம் ‘குடித்தல்’ குறித்த பிரச்சனையைப் பற்றியும் விவாதிக்கப்போகிறோம். நான் போதை தரக்கூடிய பானத்தைப் பற்றியும் இந்த தொற்று நோயால் நாம் எவ்வாறு நம்மை விடுவித்துக்கொள்வது பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறேன்.

கள், ஒயின்ஸ், பீர்ஸ் விஸ்கிஸ் போன்ற எல்லாவகையான மது பானங்களை குடிப்பது பொதுவாகவே உலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். உயரக சரக்குகள் பணம் படைத்தவர்கள் மத்தியில் அதிகம் காணப்படுகிறது, இது பணம் படைத்தவர்கள் இவற்றை ருசிப்பது அதிக விலையுள்ள போதை தரக்கூடிய மது பானங்கள் என்பதைக் காண்பிக்கிறது. இக்கருத்து உண்மையாயிருக்கையில், ஒருவனுடைய நண்பர்கள் குடிக்கக் கொடுப்பதற்கு ஏதுவாகயிருக்கிறது, குறிப்பாக வெளிநாட்டு சரக்குகளை குடிக்கின்றனர், இது ஒருவருடைய நோக்கங்கள் தன் நிலையை மற்றவர்களுக்கு உயர்த்திக் காண்பித்து தன்னை வெற்றியுள்ளவனாக காண்பிக்கிறதாகக் காணப்படுகிறது.

நீங்கள் எப்போதாவது விமானத்தில் பறந்திருப்பீர்களானால், இலவசமாகப் குடிப்பதற்கென்றே அநேக ஜனங்கள் விமானத்தில் பறக்க வந்திருப்பதை நீங்கள் சந்தேகமின்றி கவனித்திருப்பீர்கள். பீர் பறிமாறப்படும் சிற்றுண்டிகளைச் சுற்றிலும் பீர் குடிப்பவர்கள் பாட்டில் பாட்டிலாக வாங்கிக் குடிப்பதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?

பணக்கார வியாபார மக்கள் மத்தியிலும் அரசாங்க வட்டாரங்கள்



# உதவி செய்யுங்கள் – Help

***- Rajamani***

யோவான் 5-ம் அதிகாரம் 1முதல் 9 வசனங்களில் ஆண்டவர் இயேசு செய்த அற்புதத்தை காண்கிறோம். யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது அந்தப் பண்டிகையின்போது இயேசு எருசலேமுக்குப்போனார். ஆட்டுவாயில் என்ற இடத்தின் அருகில் ஐந்து மண்டபங்கள் கொண்ட ஒரு குளம் இருந்தது. எபிரெய மொழியில் அதற்கு பெதஸ்தா என்று பெயர். அங்கே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் போன்றோர் அந்த குளத்தண்டை படுத்திருந்தனர். அந்தக் குளத்தின் தண்ணீர் எப்பொழுது கலங்கும் என காத்துக்கொண்டிருந்தனர். ஏனெனில் சில சமயங்களில் தேவ தூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான், தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான்.

இந்த குளம் எப்போது கலங்கும் தன்னை யார் தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள் என்ற ஏக்கத்தோடு 38 வருஷம் வியாதிகொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே குளத்தண்டை படுத்திருந்தான். இயேசு அவனைக் கண்டு அவன் வெகுகாலமாய் வியாதியஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். அவனோ ஆண்டவரே தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான். இயேசு அவனை நோக்கி: எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். உடனே அவன் எழுந்து படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தான். உதவியற்ற அவனுக்கு இயேசு ஒரு மாபெரும் அற்புதத்தை செய்து அவனை சுகப்படுத்தினார். இப்படி உதவியற்றவர்களுக்கு நாமும் உதவிடவேண்டும். அவனுடைய நம்பிக்கை வீண்போகவில்லை. இன்றைக்கு இந்தவிதமான கஷ்டத்தோடு இருக்கும் அன்பு உள்ளங்களே நீங்கள் இயேசுவிடம் உங்களுடைய கோரிக்கையை வையுங்கள். அவர் உங்களை அற்புதமாக வழிநடத்துவார்.

நோயை காரணம் காட்டி பிறரின் இரக்கத்தை சம்பாதிப்பவர்களும், பொருள் உதவியை எதிர்பார்த்து வாழ்பவர்களும், உழைப்பதற்கு அச்சப்பட்டு பிறர் தயவில் வாழ்பவர்கள் பலர் நம்முடைய சமுதாயத்தில் உள்ளனர். பெதஸ்தா குளத்தில் இருந்த மனிதன் 38வருடங்களாக உண்மையிலே வேதனைபட்டவன். உதவியற்ற அவனுக்கு கர்த்தருடைய உதவி கிடைத்தது. பரிபூரண சுகம் அடைந்தான். நாமும் இப்படிப்பட்ட உதவியற்றவர்களுக்கு உதவிடுவோம்.

அட்டைப் பகுதியில் பின்புறம் உள்ள **கிறிஸ்துவின் வசனம்** டி.வி நிகழ்ச்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது. **தமிழன் டிவியில்** ஒவ்வொரு திங்கள் காலை 6.00 மணிக்கும் மற்றும் சனிக்கிழமை மாலை 6.15 மணிக்கும் நிகழ்ச்சிகள் வெளிவருகிறது.

சமாதானபிரபுவின் பிறப்பு உலகத்திற்கு இரட்சிப்பைக் கொண்டு வந்தது. இன்றைக்கு அநேக குடும்பங்களில் சமாதானமில்லை. சில ஸ்திரீகள் தங்கள் குடும்பத்திலுள்ள பிரச்சனைகளைக் குறித்து வேதனையுடன் அழுதுகொண்டு மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுகிறார்கள். ஸ்திரீகளாகிய நமக்கும் நம்முடைய புருஷனுக்கும் இடையே சண்டைகள் சச்சரவுகள் எழும்புமானால் பேசாமல் அமைதியாக இருந்துவிட்டால் எல்லாம் சூரியன் அஸ்தமிப்பதற்குள் சரியாகி விடும். அதைசெய்யாமல் நாள்கணக்காக அதை பெரிதுபடுத்தி பழையவைகளை கிளரிக்கொண்டே இருப்போமானால் பிரச்சனைகள் ஒரு முடிவுக்கு வரவாய்ப்பு இல்லை. வேதாகமம், "பேசாதிருந்தால் மூடனும் ஞானவான் என்று எண்ணப்படுவான்; தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமான் என்று எண்ணப்படுவான்" (நீதி.17:28) என்று கூறுகிறது. வீட்டில் எழும்பக்கூடிய கோபத்தை "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்" நீதி.15:1–ன் படி ஸ்திரீகளாகிய நாம் பொறுமையுடன் நடந்துகொள்ளும்போது குடும்பங்களில் சமாதானம் ஏற்படும். சமாதான கர்த்தர் வந்தும் இன்னும் குடும்பங்களில் சமாதானம் இல்லை என்றால் அதற்கு காரணம் என்ன? சமாதான கர்த்தருடைய வசனம் அங்கு இல்லை என்றே சொல்வேன். "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்படிகிறதுபோல, உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" (எபேசி.5:22). உண்மையிலே நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்களானால் நிச்சயமாக எந்த நிபந்தனையுமின்றி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியவேண்டும். நமக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் வசனத்தின்படி "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" (கொலோ.3:17).

புதிய ஏற்பாட்டில் லூக்கா 1–ம் அதிகாரத்தில் நாம் காணும் ஸ்திரீகள் நமக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாயிருக்கின்றனர். மலடியாயிருந்த எலிசபெத்தும் அவள் புருஷன் சகரியாவும் "கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்". இந்த தம்பதியனர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை காரியத்தை செய்து குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். ஆனபடியினால் அவர்களுக்கிடையே எந்த கருத்து வேறுபாடும் இருந்ததாக வேதத்தில் காணமுடிய வில்லை. கர்த்தருக்குள்ளிருக்கும் நாமும் இவர்களைப்போல் இருந்தால் நிச்சயம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்போம். "பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்... கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" (எபே.4:27,29). இப்படிச் செய்வீர்களானால், எதிராளியாகிய பிசாசுக்கும், பிசாசினால் அனுப்பப்படுகிறவர்களுக்கும் நம்முடைய குடும்பத்தில் இடமிருக்காது. ஒவ்வொருநாளும் தேவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டு, தேவனுடைய சித்தத்தின்படி ஒவ்வொரு நாளும் வாழும்படியாக உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். குடும்பங்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டது. அதை பாதுகாப்பது நமது கடமை.

–தொடரும்

**"புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்" நீதிமொழிகள் 14:1**



மத்தியிலும் ராணுவத்திலும் சினிமாக்காரர்கள் மத்தியிலும் மேலும செல்வம் படைத்து ஏதோ ஒருவர் அல்ல பல மனிதர்கள் மத்தியில் குடிப்பது என்பது தொடர்ந்து நடைபெறுகிறது. இது செல்வம் பெற்றிராத மக்கள் கூட்டத்தின் மத்தியிலும் குடிப்பழக்கம் தொடர்கிறது. அவர்கள் விலைமலிவான சரக்குகளை, உள்ளூர் தயாரிப்புகளை, மேலும் வீட்டில் தயாரிப்பவைகளையும் கூட குடித்து, தொடர்ச்சியாக அதானால் மாட்டி இழுக்கப்பட்டுள்ளனர். அனைத்தும் அவர்களுடைய வாழ்விற்கு ஆபத்தானதும் மற்றவர்களுடைய வாழவிற்கும் ஆபத்தானதுமாகும். மதுபானம் அருந்தும் பழக்கத்திற்கு மாறியது, தாங்கள் உயிர் வாழ்வதற்கு இது தேவையானது என நினைத்து இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என அதில் நிலைத்திருக்கின்றனர். அதன் பிறகு ஒருவனுடைய மது அருந்தும் பழக்கம் மூளை பாதிப்பு, இருதயம் பாதிப்பு, புற்றுநோய், உணர்ச்சிவசப்படும் தொந்தரவுகள், பணம் விரயம், மற்றும் பல பாதிப்புகளைக் குடிப்பவர்கள் பெறவேண்டிருக்கிறது என்பதே அவனுடைய விளைவாகும். அவன் கார் ஓட்டினால், அவனால் மிக நன்றாகவே தன்னை கொல்லமுடியும் அல்லது மற்றொருவனை கொல்லுவான் அல்லது அதிகமாக ஒன்று மறியா மக்களை கொன்றுவிடுவான். உண்மையாகவே இது மிக அதிகமாக கிரயம் செலுத்த வேண்டியதாயிருக்கும்.

தொடர்ச்சியான மது அருந்துவதினால் ஒருவன் எப்படி நன்மையை பெறமுடியும்? அதனால் உணவின் மதிப்பை அறியமுடியாது. எந்த ஒரு நன்மையையும் பெறமுடியாது என அதைப்பற்றி நான் அறிவேன். அதனால் பல பிரச்சனைகள், துயரங்கள், மேலும் தலைவலிகள் போன்றவை மது அருந்துபவர்களுக்கு வரும் அடிக்கடி மரியாதை குறைகிறது, தன் வேலையை இழக்கின்றான், குடும்பத்தை இழக்கின்றான், உடல் நலத்தை இழக்கின்றான், அதிகமாக மது அருந்துவதினால் தன் ஆத்துமாவை இழக்கின்றான்.

மது அருந்தும் பழக்கம் ஒருவனுடைய உடல் நலத்திற்கு நல்லது அல்லது பவுல் தீமோத்தேயுவுக்கு அவனுடைய வயிற்றிக்காக கொஞ்சம் திராட்சரசமும் எடுத்துக்கொள் என்று சொல்லி இதை நியாயப்படுத்த முயற்சிக்கிறவர்கள் இருக்கிறார்கள்.ஆனால் மருந்து குடிக்கிறவர்கள் யார் பாட்டில் முழுவதையும் குடிக்கிறார்கள்? மருந்தைப் போல மதுவை சரியன முறையில் பயன்படுத்தினால் அதினால் ஒரு தவறுமில்லை. பவுல் தீமோத்தேயுக்கு உன் பலவீனத்திற்காக கொஞ்சம் திராட்சரம் எடுத்துக்கொள் என்று புத்திமதிசொன்னதை நீங்கள் கவனிப்பீர்கள். இன்று பீர், அல்லது விஸ்கி குடிக்கிற மக்கள் பயன்படுத்துகிற முறைக்கு முற்றிலும் மாறுபட்டது இது.

வழக்கறிஞராக இருப்பவர் சகவாசப் பிரியத்திற்காக மது அருந்துவது தவறில்லை அல்லது அதைபோல இது நவீனத்திற்காக பயன்படுத்தப்படுகிறது என்கின்றனர். ஆனால் எவ்வளவு தூரம் உன்னால் குடிக்க முடியும் என யார் கூறப் போகின்றனர்? இனி மேலும், ஏன் யாரேனும் ஒருவர் சகவாசப் பிரியத்திற்காக குடிக்க கொடுக்க வேண்டும்? மதுபானங்கள் உன்னை எங்கு கொண்டு செல்லும் என நீ அறியும்போது, இதைவிட்டு விலகுவது மிக மிக நியாயமானதாக இருக்கும். பின்பு திருமணத்திற்காக வீட்டில் தயாரித்த மதுபானங்களைக் குடித்ததினால் இன்று மரித்துப்போன பலரைப் பற்றி நீ நினைத்து பார், மேலும் நேரத்தை களிப்புடன்

கழிப்பதற்காக குடித்ததற்காக பதிலாக அந்த நேரம் துயரமாக மாறி, குடித்த பலர் மரித்துப் போனதையும் நினைத்துப்பார். இருந்தபோதிலும் தொடர்ந்து மது அருந்தும் மக்களுக்கு இது புரிந்து கொள்ள கடினமானதாயிருக்கிறது. வெளிப்படையாகவே, இது சிலருக்கு நடைபெறும் எனவும், ஆனால் இது தங்களுக்குக் ஒருபோதும் ஏற்படக்கூடாது எனவும் இது வேறுயாருக்காவது நடைபெறும் எனவும் காரணம் காட்டுகின்றனர். ஆனால் இது முட்டாள்தனமான நினைவாயிருக்கின்றது.

தேவன் இது குறித்து என்ன சொல்லுகிறார் என்று அறிய நாம் இப்போது வேதாகமத்திற்குத் திரும்புவோம். நீதிமான் "திராட்சரம் பரியாசம் செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல" (நீதி.20:1) என சாலொமோன் சொல்லுகிறான். ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளபடி, மதுபானம் குடிப்பதற்கு கவர்ச்சிகரமான ஒன்று என சில நினைக்கின்றனர், ஆனால் சாலொமோன் கருத்துப்படி இது இதற்கு நேர் எதிரிடையானது. மனிதன் தன்னால் இதைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதைவிட பரிதாபகரமானது வேறெதுவும் இல்லை. ஏனென்றால் அவன் குடிபோதையில் மூழ்கிப்போயிருக்கிறான். சிலர் நல்ல நேரத்தை அநுபவிப்பதற்கேதுவானது என இதைக் கூறுகின்றனர். இதனால் நன்மை என்ன இருக்கிறது?

இங்கே அப்போஸ்தர் பவுல் கூறுவதைக் கேளுங்கள், அவர் கூறுகையில் "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிகாரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (1கொரி.6:9-10) என்கிறார். தயவு செய்து இங்கே பட்டியலிடப்பட்டுள்ள கெட்டவர்களையும் இழிவான குணமுள்ளவர்களையும் கவனியுங்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய ராஜ்யத்திற்குள் அல்லது தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்று பவுல் சொல்லுகிறார். இயற்கையாகவே இப்படிப்பட்ட மக்களும் கூட மனந்திரும்பி, தேவனுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட இயலும், ஆனால் அவர்கள் தொடர்ந்து செய்யக்கூடாது மேலும் அவர்கள் மரிக்கும்போது கர்த்தருடைய சபைக்குள் அல்லது பரலோகத்திற்குள் நுழைய முடியாது. மதுபானம் அருந்துகிறவர்களும் கூட என்பதையும் கவனியுங்கள். இந்த உலகில் இப்போது யார் மதுபானப் பிரியராக இருக்க விரும்புவார்கள்? நீங்கள் குடிக்கிறவர்களை யாரென அறிவீர்களென்றால் பிறகு குடிகாரர்கள் யார் என்பதையும் அறிவீர்கள். நான் நினைக்கிறேன் நீங்கள் இதை அறிவீர்கள், ஆனால் நீங்கள் இதை அறியவில்லையென்றால் நான் உங்களுக்குச் சொல்லுவேன். குடிப்பழக்கமுள்ளவர்கள் போதை தரும் பொருட்களை குடிப்பவர்கள் மேலும் போதை தரும் பொருட்களைக் குடிப்பவர்கள் வழக்கமாக அதிகம் குடிப்பவர்கள் அல்லது அவன் அந்தந்த நேரங்களில் குடிக்கிறவன் மேலும் அவ்வப்போது குடிக்கிற அவன் தொடர்ந்து குடிப்பழக்கத்தையுடையவனாகிறான். இப்போது தொடர்ந்து குடிப்பழக்கத்தையுடையவானகும் போது அதன்பின் அவன் அதிலிருந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவனாகிறான். இந்நிலையில் அவன் மரித்து



பெண்கள் பகுதி

# பெண்ணாய் பிறந்தவளே

## O! Who Born As A Woman

-J.GloryArjunan



பிறக்கும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்ற கேள்வி முதலாவது கேட்கப்படுகிறது. ஏன் இந்தக் கேள்வி. ஆணாக பிறந்தால் ஒரே அமர்க்களம். பெண்ணா பிறந்தா பெற்ற தகப்பன் கூட தன் பிள்ளையைப் பார்க்க விரும்புவதில்லை. முதன் முதலில் ஒரு பெண்ணை ஆணிலிருந்து நம்முடைய பிதாவாகிய தேவன் உண்டாக்கினார். இது மாபெரும் அற்புத செயல் அல்லவா? இன்று ஒரு பெண்ணையும் ஆணையும் பெற்று எடுப்பது ஒரு பெண்ணாக இருக்கிறாள். ஆனால் உலகத்தின் முதன் முதலில் ஆணிலிருந்தே ஒரு பெண் வெளிப்பட்டாள். அப்பொழுது வெளிப்பட்ட அந்தப் பெண்ணைப்பார்த்து முதல் மனிதனாகிய ஆதாம் "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்" (ஆதி.2:24). அன்று ஆதாம் அவளை தன் மனைவியாக ஒரே சரீரமாக நேசித்தான். அந்த நேசம் இன்று அநேகரிடம் இருப்பதில்லை.

இந்த ஆதாம் மூலமாக வெளிப்பட்ட ஸ்திரீ பிசாசுக்குச் செவிகொடுத்ததினால் இருவரும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று... அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது" (ரோம.5:12,14). ஆதாமின் மூலமாக வெளிப்பட்ட ஸ்திரீயை பயன்படுத்தி பிசாசு உலகத்தில் பாவத்தை விதைத்தான். ஆகையால் இன்றும் ஏவாளை குறித்து பேசப்பட்டு வருகிறது. பெண்களைக்கொண்டு பிசாசு தந்திரமாக ஏமாற்றி தன்னுடைய வேலைகளை ஆரம்பித்துவிடுவான் என்று பேசப்படுகிறது. ஏவாளின் வழி வந்த மரியாள் என்ற பெண்ணைக் கொண்டு பாவத்தை ஜெயிக்கும்படி பிதாவாகிய தேவன் பரிசுத்தரை பெற்றெடுக்கும்படி அநுக்கிரகம் செய்தார். உலகத்திலே உள்ள அநேக பெண்களுக்கு கிடைக்காத ஒரு மாபெரும் பாக்கியத்தை மரியாள் பெற்றாள். பெண்ணாய் பிறந்துவிட்டாளே என நினைத்து, ஏதோ இடி விழுந்த குடும்பம்போல சிலர் மாறிப்போகின்றார்கள். மரியாள் என்ற பெண் பெற்றெடுத்த மாமன்னன் இயேசுவினாலே உலகத்திற்கு இரட்சிப்பு வந்தது என்பதை நீங்கள் அறிவீர்களா? "ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே" என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (ரோம.5:17).

இச்செய்தியை வாசிக்கும் அன்பு பெண்ணே நமது ஆதித்தாய் ஏவாளினால் வந்தது பிரச்சனை அதேவேளையில் மரியாள் என்ற பெண்ணின் மூலமாக உலகஇரட்சகர்,

## ஞானஸ்நானத்தில் பல காரியங்கள் சம்பவிக்கின்றன
## Many Things Happen at Baptism

*- Jerome Savage*

மேலுள்ள தலைப்பு குறிப்பிடுகிறபடி, வேதாகம ஞானஸ்நானம் பல குறிப்பிடத் தகுந்த விளைவுகளைக் கொண்டு வருகிறது.

1. நாம் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுகிறோம் (மத்.3:15).
2. நாம் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோம் (அப்.10:48).
3. நாம் பாவமன்னிப்பைப் பெறுகிறோம் (மாற்.16:16; அப்.2:38).
4. நாம் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் தங்கும் சிலாக்கியத்தைப் பெறுகிறோம் (அப்.5:32).
5. நாம் கிறிஸ்துவுக்குள் ஒரு குழந்தையாக மாறுகிறோம் (1பேது.2:2).
6. நாம் ஒரு புதிய சிருஷ்டியாக மாறுகிறோம் (2கொரி.5:17).
7. நாம் மனந்திரும்பி மறுபடியும் பிறக்கிறோம் (யோவா.3:5; மத்.18:3).
8. நாம் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்கிறோம் (கலா.3:27).
9. நாம் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானப்படுத்தப்படுகிறோம் (1கொரி.12:13; எபே.1:22,23).
10. நாம் சபையில் சேர்க்கப்படுகிறோம் (அப்.2:47).
11. நாம் கிறிஸ்துவின் ராஜ்யத்துக்குள்ளாக கொண்டு செல்லப்படுகிறோம் (கொலோ.1:13).
12. நாம் தேவனுக்கு முன்பாக இப்பொழுது தெளிவான மனசாட்சியைப் பெற்றிருக்கிறோம் (1பேது.3:21).
13. நாம் இப்பொழுது ஒரு கிறிஸ்தவனாக தேவனை மகிமைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் (1பேது.4:16).
14. நாம் பல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றவர்களாயிருக்கிறோம் (எபே.1:3).
15. ஜெபங்களிலும் விண்ணப்பங்களிலும் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார் (ரோம.8:26,27).
16. நாம் வெளிச்சத்திலும், இயேசுவின் இரத்தம் நம்மை சுத்திகரிப்பதிலும் நடக்கிறோம் (1யோவா.1:7).
17. கிறிஸ்துவுக்குள் இப்போது ஆக்கினைத்தீர்ப்பு ஏதும் இல்லை (ரோம.8:1).
18. இவையெல்லாவற்றையும் செய்கின்ற தேவனுடைய செயல்பாடுகளில் நாம் விசுவாசம் கொண்டவர்களாயிருக்கிறோம் (கொலோ.2:12).

புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானத்திற்கு 128 ஆதாரங்கள் உள்ளன. இந்த அனைத்து அற்புத காரியங்கள் நடப்பதை அறிந்து ஏன் ஒருவன் ஞானஸ்நானத்தை மறுக்கவேண்டும்? *- The Voice of Truth International*

**இயேசு உங்களில் தம்முடைய ஜீவனை முதலீடு செய்தார் நீங்கள்ஏதாவது வட்டியைக் காண்பித்துள்ளீர்களா? - *VOTI***




விடக்கூடும் அல்லது சண்டையில் ஈடுபடக்கூடியவனாகிறான் பிறகு யாராவது ஒருவன் அவனைக் கொன்று போடக்கூடியவானகிறான் அல்லது குடிபோதையில் தொடர்ந்திருக்கிறவன் தெருவை விட்டு வெளியேறவும் அங்கேயிருந்து ஓடிப்போகக் கூடியவனாகவும் மாறுகிறான். அவன் ஒரு கார் வைத்திருப்பவனானால், அவன் காரில் ஏறி வீட்டை நோக்கி ஓட்டிச் செல்ல துவங்கி யார்மேலாவது காரை ஏற்றவிட்டு ஓடுகிறவனாகக் கூடும். ஒரு குடிப்பழக்கமுள்ளவன் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டாலும் ஒத்து கொள்ளாவிட்டாலும் பின்பு அவன் கெட்டவனாகவே கருதப்படுவான். என்னுடைய நண்பனே, நீங்கள் ஒரு போதை தரும் பொருட்களை அருந்துபவர்களென்றால் நீங்கள் நிகழக்கூடியதைத் தெரிவிக்கும் ஒரு குடிகாரன். இப்பொழுது குடிப்பழக்கத்திலிருந்து உங்களை எப்படி விடுவித்துக் கொள்வீர்கள்? நீங்கள் போதை பொருட்களை அருந்துவதை விட்டு விலகவேண்டும், நிச்சயமாக, அல்லது நீங்கள் அந்த முதல் குடியை நீங்கள் ஒருபோதும் எடுக்க மாட்டீர்கள்.

-தொடரும்

**இலங்கை ஆசியசேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.30 முதல் 5.45 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**

## வாசகர் கவனத்திற்கு...



- 2012-ம் வருட சந்தா செலுத்திவிட்டீர்களா?
- உங்கள் நண்பர்களுக்கும் சந்தா செலுத்தி அவர்களும் சத்தியத்தை அறிய உதவிடலாமே!
- உங்களுக்கு வரும் மாத இதழில் கவர் லேபிலில் உள்ள முகவரியை கவனியுங்கள். உங்கள் பதிவு எண் Ref.No-----(S) என்று இருந்தால் நீங்கள் சந்தா செலுத்துபவர். இல்லையேல் உடனே செலுத்தி தொடர்ந்து மாதஇதழை பெற்றுக்கொள்ளுங்கள்.
- சந்தா செலுத்தாதவர்களுக்கு வரும் ஆண்டில் இவ்விதழ் நிறுத்தப்படும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.
- இவ்விதழ் தேவைப்படுவோர் உங்களுடைய முழு முகவரியை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பிவைக்கவும்.
- ஆவிக்குரிய புத்தகங்கள் பெறவிரும்புகிறவர்கள் தொலைக்காட்சி அல்லது ரேடியோ நிகழ்ச்சியை கேட்டு அந்நாளில் வந்த செய்தியின் தலைப்பை தெரியப்படுத்தி இவைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.
- மேலும் விபரமறிய 9443558041 எண்ணைத் தொடர்புகொள்ளவும்.

பெண்கள் பகுதி

# மனோநிலைகள்

## Attitudes

-Betty



மனோநிலைகள்... நாம் நம்முடைய ஒரு பகுதியை தீர்மானிக்க நாம் இந்த ம னோ நிலையை அடக்கியாள்வோமானால்,நம்முடைய நாட்களில் மற்றும் வருடங்களில் எப்பேர்பட்ட மிகப்பெரிய கட்டுபடாக இருக்கும். நம்முடைய இருதயத்தில் திடனாய் பதியவைத்துக் கொள்வதற்கும், நம்முடையவற்றை நினைவுப்படுத்திக் கொள்வதற்கும் அதிகமதிகமாக, வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் நாம் சமாளித்துக் கொள்ளுகிவர்களாயிருக்கவும் இது எத்தகைய உண்மை!

கிறிஸ்தவர்கள் கூட காரியங்களை வெவ்வேறாக மதிப்பிடுகின்றனர் ஏனென்றால் வெவ்வேறான மனோநிலைகள்!

சூழ்நிலைகளுக்கு வேறுபட்ட பதில்களையும் அதன் விளைவின் பயன்களையும் பாருங்கள்:

**சபையின் வழக்கமான பாட்டுத் தலைவர் தொலைவில் இருந்தார், எனவே ஒரு மாற்று நபர் கண்டுபிடிக்கப்பட வேண்டியிருந்தது.**

ஜார்ஜ்: குறும்பாக, "நான் இது குறித்து கவலைப்படவில்லை, மேரி, இன்று காலை நான் பாடலை நடத்தவிருக்கிறேன். ஏன் அவர்கள் மற்றவர்கள் எவரையும் பாட்டு நடத்தும்படி கேட்டுக்கொள்ளவில்லை?"

புன்முறுவலுடன், ஒரு அசைவு: "வா ஆன்", ஆராதனைக்காக பாடல்களைத் தெரிந்தெடுக்க உதவிசெய். அவர்கள் டாம் தொலைவிலிருப்பதால் நாம் அந்த இடத்தை நிறைவு செய்யும்படி விரும்புகிறார்கள்!"

**ஒரு சிறுவர்களின் வகுப்பிற்கு ஆசிரியர் ஒருவர் தேவைப்பட்டது.**

பார்பரா: "ஓ, மாட்டேன் நீ செய்யமாட்டாயா! நான் பண்படாத சிறுபிள்ளைகள் கூட்டத்திற்கு கற்றுக் கொடுக்கப்போகிறேன்"

ஜேன்: இந்த வயது சிறுபிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க எனக்கு விருப்பம். அவர்கள் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் போதிய தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள், எனவே அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க பல வழிமுறைகள் உள்ளன. மேலும் இந்த வயது கற்றுக்கொள்ள மிக ஆயத்தமுள்ள வயது!

**போதகர் விடுமுறையில் இரண்டு வாரத்திற்கு தொலைவில் இருந்தார்.**

ஜான்: "எனக்குத் தெரியவில்லை ஏன் எப்போதும் எல்லாரும் கூடுதல் வேலைகள் எல்லாவற்றையும் என்மேலே திணிக்கிறார்கள்". ஏன் மற்ற சில மனிதர்களால் ஏதாவது சில பொறுப்புகளை செய்யமுடிவதில்லை?"

சார்லஸ்: "கண்டிப்பாக, ஜிம்முக்காக நான் செய்வேன். என்னுடைய முன்னேற்றத்திற்காக ஒரு சிறிய வேலையைக் கூட்டிக் கொள்வது எனக்கு ஒரு நல்ல



சந்தர்ப்பம். இப்போது நான் பேசுவதற்கான சந்தர்ப்பத்தின் பயனைப் பெறுவேனென்றால், தேவன் நிச்சயமாக ஊழியத்தின் மற்ற கதவுகளை எனக்காக மென்மேலும் திறப்பார்".

**கர்த்தருடைய பந்திக்கான முக்கியத்துவத்துக்கும்**
**கட்டிடத்திற்காகவும் ஒரு புதிய பட்டியல் உருவாக்கப்பட்டிருக்கிறது**

மேரி: "நல்லது, அந்தக் கட்டடத்தினுடைய இப்படிப்பட்ட போஜனத்தைத் அவர்கள் தயாரிக்கும்போது, அந்த பாத்திரத்தை சுத்தம்செய்யமாட்டேன் என நினைக்கத் தேவையில்லை. மேலும் மற்ற யாராவது பந்தியை தயார் செய்யட்டும். எனக்கு அப்பம் எப்படி செய்யவேண்டுமென தெரியாது மேலும் எப்படியோ, நான் பார்க்கவில்லை ஏன் நாம் அதைச் செய்யவேண்டியிருக்கிறது".

ஆன்: இந்தமாதம் ஒருவர்கூட சபைக் கட்டிடத்தை சுத்தம் செய்யவில்லையென்றால், நாங்கள் செய்கிறோம். சிலசமயங்களில் கவனக்குறைவாக அதை அழுக்குப்படுத்துகிற மனிதர்கள் இருந்த போதிலும், இது தேவனை ஆராதிப்பதற்கென்று தனியாக அமைக்கப்பட்ட கட்டிடம், எனவே மிகவும் சிறப்பான வழியில், இது தேவனுடைய வீடு என நினைத்து சுத்தம் செய்யமுடியும் என்ற நினைவு எனக்குப் பிடிக்கும். மேலும் நான் பந்தியை ஆயத்தப்படுத்துவதிலும் விருப்பப்படுகிறேன். மனிதனுடைய கரங்களால் அவைகளை சுத்தம் செய்யாமலும் அவற்றை ஆயத்தப்படுத்தாமலும் இயேசுவின் மரணத்தின் நினைவுகூருதலானதை தொடரமுடியாது. ஆராதனையின் எனது சொந்த தனிப்பட்ட நேரத்தைக் கொண்டிருக்கிறேன் மேலும் நாம் பந்தி பாத்திரங்களின் மேல் நான் அக்கறைக் கொண்டிருக்கும்போது நான் என்னையே தேவனுக்குக் கொடுக்கிறேன் மேலும் சிறப்பாக அப்பம் செய்வதிலும் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறேன். இது மாவையும் எண்ணெயையும் எடுத்துவைக்க என்னை நல்லுணர்வுள்ளவளாக்குகிறது அத்துடன் புதிதாக மற்றும் அன்புடன் சபை தொழுகையில் உயர்ந்த நிலைக்கென அப்பம் தயார் செய்வதற்கு என் திறமையை சிறப்பானதாக மாற்றும் உணர்வையும் எனக்கு ஏற்படுத்துகிறது.

**ஒருவர் வீட்டு வேதாகம கற்றலுக்கு வேதாகம அஞ்சல் முறை பாடத்தினை எடுக்கும்படி அழைக்கப்பட்டிருந்தார்:**

ஜேம்ஸ்: "நல்லது, அங்கே நான் செல்ல எனக்கு நேரம் இருக்காது என்று அவர்கள் நினைக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். என்னுடைய எல்லா அதிகப்படியான நேரம் பயிற்சி செய்வதிலும் சபை பந்து விளையாட்டுக் குழுவிலும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. மூப்பர்கள் பாடம் எடுப்பதில் ஒருவராக இருக்கவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இது தவிர, இந்த வாக்கர் என்பவரை எவ்வகையிலும் எனக்குத் தெரியாது அவர் உண்மையிலே எதிர்பார்க்கக் கூடிய ஆர்வமுள்ளவர் அல்ல மேலும் அதிகமான சிறு சிறு பிரயாணங்களில் நேரம் வீணடிக்கப்படும்..."

சாம்: இந்த மனிதனை சந்திக்கும்படி அவர்கள் எனக்கு இவரைக் கொடுத்ததினால் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். உண்மையாகவே கற்றுக்கொள்ள விரும்புகிற யாரோ ஒருவரை கண்டுகொள்வது எப்பேர்பட்ட ஆச்சரியம்! நான் இப்போதே அவரை என்னை அறிமுகப்படுத்திக் கொள்ள அவரை அழைத்து எப்போது முதல் வகுப்பை ஒழுங்கு செய்யலாம் என அவரைக் பார்த்து கேட்பேன். அத்தோடுகூட சத்தியத்தைக் கற்றுக் கொள்வதில், அவர்களோடே படித்துக் கொள்வதிலும் வாக்கருடைய சந்தர்ப்பம் ஜோனுக்கும் மேலும் எங்களுடைய சொந்த ஆவிக்குரிய வளர்ச்சியில் எனக்கும் நன்றாக இருக்கும்....

-தொடரும்

உன்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம் -நீதி.12:22